# கள்ளக்குறிச்சி நகராட்சி

2021ம் ஆண்டு ஜீலை மாதம் 30 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை.. திரு என்.குமரன், B.Sc.,**
**தனி அலுவலர் / ஆணையாளர்**

**பொருள் எண் – 01**

மாவட்டஆட்சித்தலைவர் கள்ளக்குறிச்சி அவர்களின் நேரடி அறிவுரைக்களுக்கிணங்க இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கொரோனா வைரஸ் நோய் தொற்று 2 வது அலை அதிகளவில் பரவி பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் இப்பகுதியில் இந்நோய் தொற்று மேலும் பரவாமல் தடுக்கும் நடவடிக்கைகாக அனைத்து வார்டு பகுதியிலும் கிருமி நாசினி தெளிக்கும் பணிகள் மேற்கொள்ள இந்நகராட்சியின் ராட்சத ஸ்பிரேயர் (BHEL Mist) இயந்திரத்தினை வாகனத்தில் பொருத்தி கிருமி நாசினி தெளிக்கும் பணிகள் மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. எனவே, மேற்கண்ட பணியினை மேற்கொள்ள ராட்சத ஸ்பிரேயர் இயந்திரத்தினை இயக்க ஜெனரேட்டர் தேவைபடுவதால், வாடகை ஜெனரேட்டர் மூலம் ராட்சத ஸ்பிரேயர் இயந்திரத்துடன் பொருத்தி கிருமி நாசினி தெளிக்கும் பணியினை மேற்கொள்ள பணியின் அவசர அவசியம் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 ன் பிரிவு 15 ன் கீழ், பணி மேற்கொண்டமைக்கு வரப்பெற்ற பட்டியல் தாகை ரூ.116800/-யை (ரூபாய் ஒரு லட்சத்து பதினாறாயிரத்து எண்ணூறு மட்டும்) திரு.மு.சரவணன் கள்ளக்குறிச்சி என்பவருக்கு வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1.பதிவு செய்யலாம்

2.பணியின் அவசர அவசியம் கருதி, தனிஅலுவரின் முன்னனுமதி பெற்றுதிரு.மு.சரவணன் கள்ளக்குறிச்சி என்பவருக்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

3.பட்டியல் தொகையினைநகராட்சிவருவாய்நிதியிலிருந்துவழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 733/ 2020/28 /எச்1)**

பொருள் எண் – 02

கள்ளக்குறிச்சி நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் வாகன எண் TN15P3168 என்ற வாகனத்திற்கு தகுதி சான்று 19.06.2021 அன்றுடன் முடிவடைவதால் வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை பழுது நீக்கம் செய்ய உள்ளூர்/வெளியூர் அரசு அங்கீகாரம் பெற்ற அரசு /தனியார் நிறுவனத்திடம் விலைப்புள்ளி கோரி பழுது நீக்கம் செய்து, கள்ளக்குறிச்சி வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு சென்று தகுதிசான்றுபெற ஆகும் உத்தேசசெலவினம் ரூ.1.20 இலட்சத்திற்குமன்றஅனுமதிவேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.பணியின் அவசர அவசியம் கருதிவிலைப்புள்ளிகோரிபணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3.பட்டியல் தொகையினைநகராட்சிவருவாய் நிதியிலிருந்துமேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். /2021/எச்1)**

பொருள் எண் –03

**கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான மக்கு உரத்திடலில் உள்ள குப்பைகளை தரம் பிரித்து அகற்ற ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மேற்படி ஒப்பந்தப்புள்ளியில் M/s A.R. CONSTRUCTIONS, SALEM என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் மேற்படி நிறுவனம் பணி மேற்கொள்ளும் காலம் கடந்த நிலையில் பணியினை முடிக்காததால் அந்நிறுவனத்தின் பணி உத்தரவு இரத்து செய்யப்பட்டது.**

**BIO–MINING பணிகள் மறு ஒப்பந்தப்புள்ளியினை தொடர்ந்து M/s A.R.CONSTRUCTIONS, SALEM என்ற நிறுவனத்தின் பங்குதாரர் திரு சுந்தரராஜன் த/பெ பாஸ்கரன், கெங்கவல்லி வட்டம், சேலம் மாவட்டம் என்பவர் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண் 16058/2021 நாள் 28.07.2021இன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக திரு ஸ்ரீநிவாஸ், அரசு வழக்கறிஞர். சென்னை அவர்களை நியமனம் செய்யவும், வழக்கு கட்டணத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.**

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் இ1 / 220/ 2021)

## பொருள் எண் –04

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான குளக்கரை கடை எண் 07ஐ குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்து திரு கே.எம்.அப்துல் ஹக்கீம், 9–கீழ்த்தக்கா, கள்ளக்குறிச்சி என்பவர் கடந்த 02.05.2021ஆம் தேதியன்று உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் காலமாகி விட்டார். அவரது மகன் திரு. ஏ.ஹாஜி முஹமது காசிம் என்பவர் தனது தந்தையார் குத்தகைக்கு எடுத்து நடத்திவந்து கடை எண் 07ஐ குடும்ப சூழ்நிலையின் காரணமாக யாரும் தொடர்ந்து நடத்திக் கொள்ள முன்வரவில்லை என்பதால், அக்கடையினை நகராட்சி வசம் ஒப்படைக்கவும், நிலுவை வாடகை தொகையினை கணக்கிட்டு மேற்படி கடைக்கு செலுத்தப்பட்ட முன்வைப்புத் தொகையில் ஈடு செய்து, மீதமுள்ள முன்வைப்பு தொகையினை திரும்ப வழங்க 30.06.2021ஆம் தேதிய தனது விண்ணப்பத்தில் தெரிவித்துள்ளார்.

மேற்படி குளக்கரை கடை எண் 07க்கான வரிவிதிப்பு எண் 042/2014007 க்கு 31.07.2011 வரை செலுத்தப்பட வேண்டிய வாடகை நிலுவை தொகை ரூ. ஆகும். செலுத்தப்பட்ட முன்வைப்புத்தொகை ரூ.10,00,000/–(ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) ஆகும். (895000+105000=1000000) மொத்த வைப்பு தொகையில் வாடகை தொகை ரூ. 848125 செலுத்த வேண்டியுள்ளது. வாடகை நிலுவை தொகையினை வைப்பு தொகையில் ஈடு செய்தது போக மீதமுள்ள வைப்புத்தொகையினை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலுத்தப்பட்ட வைப்புத்தொகையில் நிலுவையில் உள்ள வாடகை தொகையினை ஈடு செய்து மீதமுள்ள வைப்பு தொகையினை குத்தகைதாரரின் மகனும், வாரிசுதாரருமான திரு ஏ.ஹாஜி முஹமது காசிம், கள்ளக்குறிச்சி என்பவருக்கு திரும்ப வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் அ2 / 1431 / 2021)

## பொருள் எண் –05

கள்ளக்குறிச்சி நகராட்சியின் பொது சுகாதார பிரிவிற்கு தேவையான E.M.சொலிவ்ஷன் மருந்து சப்ளை செய்யும் பணிக்கு குறைந்த விலைப்புள்ளிகள் 14.07.2021 அன்று கோரப்பட்டது வரப்பெற்ற விலைப்புள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ள விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | அளவு | தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | சிவசக்தி டிரேடர்ஸ், நாமக்கல் | **1 ltr** | **980.00** |
| 2 | டிரினிட்டி என்டர்பிரைசஸ், சேலம் | **1 ltr** | 1200.00 |
| 3 | ஸ்ரீ பிளஸ்டோ டெக், சென்னை | **1 ltr** | 1000.00 |

அலுவலக குறிப்பு:-

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட3 விலைப்புள்ளிகளில் வ.எண்.1ல் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s.சிவசக்திடிரேடர்ஸ், நாமக்கல் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3.இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1400 / 2021 / எச்1)**

பொருள் எண் 06

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 14, நகராட்சிக்கு சொந்தமான குளம் அமைந்துள்ளது. இக்குளம் பல ஆண்டுகளாக பராமரிப்பின்றி உள்ளதால், இதனை புணரமைக்கும் விதமாக தற்போது முதற்கட்டமாக மேற்படி குளத்தின் கறைகளை (தெற்கு மற்றும் மேற்கு பகுதி) கருங்கற்கள் கொண்டு சுவர் அமைத்திடவும், அதற்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 7,50,000/– (ரூபாய் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். /2021/இ1)**

## பொருள் எண் – 07

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 09, கருணாபுரம் பகுதியில் நடைபாதையில் உள்ள சிறுபாலம் பழுதடைந்து கழிவுநீர் முறையாக செல்ல இயலாமல், வீடுகளின் முன்புறம் தேங்கியுள்ளது. இதனால் இப்பகுதியில் சுகாதாரக்கேடு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, இச்சாலையினை இணைக்கும் விதத்தில் புதியதாக சிறுபாலம் அமைக்கவும், அருகில் உள்ள கால்வாய்களில் தண்ணீர் செல்ல ஏதுவாக கான்கிரீட் தளம் அமைக்கவும் அவசியமாகிறது. மேற்படி பணியினை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 2,50,000/– (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். /2021/இ1)**

## பொருள் எண் 08

கள்ளக்குறிச்சி நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் பயன்படாமல் உள்ள ஆழ்துளை கிணறுகள் உள்ளன. இவைகள் முற்றிலும் பயன்படுத்த இயலாமல் தண்ணீர் இன்றியும், பழுதடைந்தும் உள்ளன. எனவே, இவைகளை எதிர்வரும் காலங்களில் இந்த ஆழ்துளை கிணறுகளை மழைநீர் சேகரிப்பு அமைப்புகளாக மாற்றம் செய்யலாம். மேலும் இதற்காக ஆழ்துளை கிணறுகளை சிறு மாற்றம் செய்யவும், இதனை சுற்றிலும் தொட்டி போன்ற அமைப்புகளை கட்டி சிறுகற்கள்நிரப்பு அமைப்புகள் ஏற்படுத்த அவசியமாகிறது. எனவே மேற்படி ஆழ்துளை கிணறுகளை மழைநீர் சேகரிப்புஅமைப்பாக மாற்ற ஆகும் உத்தேச செலவினம் ரூ.400000/–க்கு மன்றத்தின் ஒப்புதலுக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கொள்ளப்படும் பணியின் அத்தியாவசியத்தினையும், எதிர்கால உபயோகத்தினையும் கருத்தில் கொண்டு பணிகளுக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் இ1/96/2021

## பொருள் எண் –09

கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் அமைக்கப்பட்டுள்ள அனைத்து மழைநீர் வடிகால்களையும் GPS வழியாக நீளம், வகைபாடு, அகலம், இணைப்பு தன்மை, தரவு தன்மை, மதிப்பீடுகள், வெளியீடுகள் தயாரித்தல், நிலவரைபடத்துடன் கூடிய அறிக்கையாக தயாரிக்க மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டப்பட்டதற்கு இணங்க, மேற்படி பணிகளை மேற்கொள்ள ஆகும் பணிக்கு 07.07.2021ஆம் தேதியன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது

| Sl. No | Particulars | **HAGROIS, THIRUMULLAIVOIL CHENNAI 62** | **EGSS, VALASARAVAKKAM CHENNAI 87** | **GEO ADITHYA TECHNOLOGIES, KODAMBAKKAM, CHENNAI 94** |
|---|---|---|---|---|
| 1. | Surveying and mapping of existing storm water drainage system that includes length of the drain, type of drain, width of drain, connectivity of drains and drain junctions using, GIS and GPS longitutude, lattitude and altitudes of the drain points to be mapped using Geospatial techniques to generate contours | 630000 | 695000 | 771186 |
| 2 | Creating the GIS based layers, data incorporation, geodata validation and output generation as both soft copy and hard copy (reports and maps) | 113400 | 125100 | 138814 |
| | TOTAL | 743400 | 820100 | 910000 |

**அலுவலக குறிப்பு:–**

1.பதிவு செய்யலாம்

2. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள **M/s HAGROIS, SS NAGAR EXTN, THIRUMULLAIVOIL, CHENNAI 600 062** என்ற நிறுவனத்தினரின் விலைப்புள்ளியை அங்கீகரிக்கலாம்..

3.பட்டியல் தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண் இ1/ 2020 / 2021**

## பொருள் எண் 10

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான குளக்கரை கடை எண் 12ஐ குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்து திரு S.அகமதுமீரான், த/பெ ஷாகுல் அமீது, ஏ6–அபிராமி அப்பார்ட்மெண்ட், துருகம் சாலை, கள்ளக்குறிச்சி என்பவர் தனது உடல்நிலை சரியில்லாத காரணத்தினாலும், குடும்ப சூழ்நிலையின் காரணமாகவும் தனது குடும்பத்தினை சார்ந்த யாரும் தொடர்ந்து நடத்திக் கொள்ள முன்வரவில்லை என்பதால், அக்கடையினை நகராட்சி வசம் ஒப்படைக்கவும், நிலுவை வாடகை தொகையினை கணக்கிட்டு மேற்படி கடைக்கு செலுத்தப்பட்ட முன்வைப்புத் தொகையில் ஈடு செய்து, மீதமுள்ள முன்வைப்பு தொகையினை திரும்ப வழங்க 30.06.2021ஆம் தேதிய தனது விண்ணப்பத்தில் தெரிவித்துள்ளார்.

மேற்படி குளக்கரை கடை எண் 12க்கான வரிவிதிப்பு எண் 042/2016012 க்கு 31.12.2021 வரை செலுத்தப்பட வேண்டிய வாடகை நிலுவை தொகை ரூ. 949900 ஆகும். செலுத்தப்பட்ட முன்வைப்புத்தொகை ரூ.10,00,000/–(ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) ஆகும். மொத்த வைப்பு தொகையில் வாடகை தொகை ரூ.949900 நகராட்சிக்கு செலுத்த வேண்டியுள்ளது. எனவே, வாடகையில் நிலுவை உள்ள தொகையினை வைப்பு தொகையில் ஈடு செய்தது போக மீதமுள்ள வைப்புத்தொகை ரூ.50900/–(ரூபாய் ஐம்பதாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலுத்தப்பட்ட வைப்புத்தொகையில் நிலுவையில் உள்ள வாடகை தொகையினை ஈடு செய்து மீதமுள்ள வைப்பு தொகையினை குத்தகைதாரரின் மகனும், வாரிசுதாரருமான திரு எஸ்.அகமதுமீரான், த/பெ ஷாகுல்ஹமீது, கள்ளக்குறிச்சி என்பவருக்கு திரும்ப வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் அ2 / 2040 / 2021)

## பொருள் எண் 11

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் உள்ள தெற்குபுறம் உள்ள 6 கடைகளை இடித்து அப்புறப்படுத்தப்பட்டு புதியதாக 7 கடைகள் கட்டப்பட்டது. மேற்படி கடைகள் பொது ஏலம் விடப்பட்டு புதியதாக வைப்பு தொகை செலுத்தப்பட்டு 2018–2019ஆம் ஆண்டு 01.08.2018 முதல் கடைகள் ஒப்படைப்பு செய்யப்பட்டது. மேற்படி கடைகள் பழைய கடைகளாக இருக்கும்போது 30 ஆண்டுகளாக நடத்திவந்த நிலையில் 01.04.2012இல் பொது ஏலம் விடப்பட்டு வைப்புத் தொகையாக ரூ.25000/–(ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்) திரும்ப வழங்கக் கோரி வரப் பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. 01.04.2012இல் செலுத்தப்பட்ட வைப்புத்தொகையினை வைப்புதொகை பதிவேட்டுடன் ஒப்பிட்டு திரும்ப வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் அ1/ /2021

## பொருள் எண் 12

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் உள்ள கடை எண் 24ஐ திருமதி எஸ்.உதயா என்பவர் கடந்த 11/2019இல் கடையினை ஒப்படைப்பு செய்துள்ளார். மேற்படி கடையினை இந்நகராட்சியில் 01.03.2021 முதல் திரு ஜே.முஸ்தபா த/பெ ஜான்பாஷா என்பவருக்கு கடைக்கான பொது ஏலத்தில் ஒப்படைப்பு செய்யப்பட்டது. மேற்கண்ட கடை எண் 24க்கு மின் இணைப்பு எண் 02/551/005/2015க்கு செலுத்த வேண்டிய மின் இணைப்பு கட்டணம் ரூ.5526/–ஐ செலுத்த கோரப்பட்டதில் மேற்படி கடைக்கு ரூ.5526ஐ நிலுவையில் உள்ளது. மேலும் 01.03.2021 முதல் கடையினை ஒப்படைப்பு செய்யப்பட்ட நிலையில் மேற்படி மின் இணைப்பு கட்டணம் ரூ.5526/–ஐ இந்நகராட்சி வருவாய் ஆய்வர் வழியே தொகை செலுத்தப்பட்டது. எனவே மேற்கண்ட கடைக்கு குத்தகை எடுத்த உரிமையாளர் திரு ஜே.முஸ்தபா த/பெ ஜான்பாஷா என்பரால் 01.03.2021முதல் மின் கட்டணம் செலுத்தப்பட்டு வருகிறது. எனவே நிலுவையில் உள்ள மின் கட்டணம் செலுத்தியமைக்கான பட்டியல் தொகை ரூ.5526ஐ வழங்க மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. செலுத்தப்பட்ட நிலுவை மின்கட்டணத் தொகையினை செலுத்திய வருவாய் ஆய்வாளருக்கு திரும்ப வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் அ2 / / 2021)

## பொருள் எண் 13

கொரோனா தொற்று காலத்தில் கொரோனா தொற்றினை கட்டுப்படுத்த 24.05.2021 முதல் 31.05.2021 வரை முடிவுற்றதை நீட்டிப்பு செய்து 07.06.2021 வரை நீட்டிப்பு செய்து தமிழக அரசால் முழு ஊரடங்கு அறிவிக்கப்பட்ட நிலையில் பொது மக்களுக்கு ஊரடங்கு காலத்தில் கிடைக்க வேண்டிய அத்தியாவசிய பொருட்களை தமிழக அரசால் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர், கள்ளக்குறிச்சி அவர்களின் வழிகாட்டுதலின்படி கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதியில் காய்கறிகள், பழங்கள் ஆகியவைகளை விற்பனை செய்ய ஏதுவாக தினசரி நாளிதழில் அறிவிப்பு வெளியிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.50000/–(ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மேற்கொள்ள மன்ற பொருள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நோய் தொற்றின் அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும் அறிவிப்பினை தினசரி நாளிதழில் வெளியிடவும், அதற்காகும் செலவினத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் சி1 / / 2021)

## பொருள் எண் 14

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலைய தென்புறக்கடை எண் 1ஐ குத்தகைக்கு எடுத்து நடத்திவந்த திருவாளர்கள் 1.அப்துல் காதர் மொய்தீன் த/பெ அப்துல்லா, 2.ஏழுமலை த/பெ காசி ஆகியோர் வ.எண் 2இல் கண்ட திரு ஏழுமலை த/பெ காசி என்பவர் பெயரில் மேற்படி கடையினை நடத்தி வருவதாகவும், தனது குடும்ப சூழ்நிலையின் காரணமாக தொடர்ந்து நடத்த முடியாத காரணத்தினால், மேற்படி கடையினை கூட்டு ஒப்பந்ததாரான அப்துல் காதர் மொய்தீன் த/பெ அப்துல்லா என்பவர் தொடர்ந்து நடத்தி வர சம்மதம் தெரிவித்து, மேற்படி கடைக்கான கூட்டு ஒப்பந்தத்தில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்வதாகவும், அதற்கு முன்னர் அக்கடைக்கான நிலுவை தொகையினை செலுத்தி விடுவதாகவும், நிலுவை தொகை செலுத்தப்பட்டவுடன் தனது கூட்டு ஒப்பந்ததாரரான திரு அப்துல்காதர்மொய்தீன் த/பெ அப்துல்லா என்பவர் தொடர்ந்து அக்கடையினை நடத்திக்கொள்ள சம்மதம் தெரிவித்து நகராட்சிக்கு விண்ணப்பம் அளித்துள்ளார். மேற்படி விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனது சொந்த சூழ்நிலையின் காரணமாக கூட்டாக ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தினை இரத்து செய்துக் கொள்ளவும், சம்மந்தப்பட்ட கடைக்கான நிலுவை தொகையினை செலுத்தியபின் திரு அப்துல் காதர் மொய்தீன் த/பெ அப்துல்லா என்பவரின் பெயருக்கு முழு குத்தகைதாரராக நியமனம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் அ1 / / 2021)

## பொருள் எண் 15

கள்ளக்குறிச்சி நகராட்சியில் அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான Laptop மற்றும் PPT Projector ஆகியவை கொள்முதல் செய்ய 09.06.2021இல் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ | நிறுவனத்தின் பெயர் | பொருள் விபரம் | தொகை ரூ |
|---|---|---|---|
| 1 | அகல்யா இன்போ டெக்,<br>விழுப்புரம் | Laptop (Dell)<br>PPT Projector | 84000<br>126000 |
| 2 | ஆதவ் சொல்யூசன்,<br>விழுப்புரம் | Laptop (Dell)<br>PPT Projector | 80000<br>120000 |
| 3 | ராம்ஜி இன்போசிஸ்<br>விழுப்புரம் | Laptop (Dell)<br>PPT Projector | 85600<br>128400 |

மேற்படி வரப்பெற்ற வ.எண் 2 ஆதவ் சொல்யூசன், விழுப்புரம் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ளதால், உத்தரவு வழங்குவதற்கும், அதற்கான செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் பி1 / 5420 / 2019)

**பொருள் எண் 16**

கள்ளக்குறிச்சி நகராட்சியில், வருவாய் நிதி / குடிநீர் நிதி 2021–2022ன் கீழ், கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு 29.07.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1. | கள்ளக்குறிச்சி நகராட்சிக்குச் சொந்தமான கிணறுகளுக்கு மின் மோட்டார்கள் கொள்முதல் செய்தல் | ரூ. 5,00,000 | M/s. J.K. டிரேடர்ஸ், கள்ளக்குறிச்சி | 0.04% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. ஸ்ரீ கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 1.49% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 2. | கள்ளக்குறிச்சி நீதிமன்றத்திற்கு பின்புறம் உள்ள கருணாபுரம் பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்தல் (வார்டு எண். 09) | ரூ. 4,50,000 | M/s. ஸ்ரீ கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 0.05% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு. J.முஸ்தபா, கள்ளக்குறிச்சி | 0.64% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 3. | கச்சிராயபாளையம் சாலை திரு.வி.க. நகரில் சிமெண்ட் சாலை அமைத்தல் (வார்டு எண். 01) | ரூ. 9,00,000 | M/s. ஸ்ரீ கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 0.02% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு. J.முஸ்தபா, கள்ளக்குறிச்சி | 1.09% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 4. | கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள MCC–க்கு தேவையான சுற்றுசுவர், நுழைவுவாயில் ஆகியவை சீரமைத்தல் | ரூ. 3,80,000 | திரு. J.முஸ்தபா, கள்ளக்குறிச்சி | 0.09% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. ஸ்ரீ கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 2.02% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 5. | துருகம் சாலை திருவரங்கம் நகர் பகுதியில் சாலை அமைத்தல் (வார்டு எண். 10) | ரூ. 3,50,000 | திரு. J.முஸ்தபா, கள்ளக்குறிச்சி | 0.07% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. ஸ்ரீ கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 1.99% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 6. | கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 01 முதல் 07 வரையுள்ள பகுதிகளில் அமைந்துள்ள சிறுமின் விசைப்பம்புகள், விசைப்பம்புகள் பழுது நீக்கம் செய்தல் / உபகரணங்கள் கொள்முதல் செய்தல் | ரூ. 9,90,000 | M/s. ஸ்ரீ கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 0.19% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. J.K. டிரேடர்ஸ், கள்ளக்குறிச்சி | 2.60% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 7. | கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 08 முதல் 14 வரையுள்ள பகுதிகளில் அமைந்துள்ள சிறுமின் விசைப்பம்புகள், விசைப்பம்புகள் பழுது நீக்கம் செய்தல் / உபகரணங்கள் கொள்முதல் செய்தல் | ரூ. 9,90,000 | M/s. ஸ்ரீ கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 0.19% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. J.K. டிரேடர்ஸ், கள்ளக்குறிச்சி | 2.60% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 8. | கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 15 முதல் 21 வரையுள்ள பகுதிகளில் அமைந்துள்ள சிறுமின் விசைப்பம்புகள், விசைப்பம்புகள் பழுது நீக்கம் செய்தல் / உபகரணங்கள் கொள்முதல் செய்தல் | ரூ. 9,90,000 | M/s. ஸ்ரீ கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 0.19% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. J.K. டிரேடர்ஸ், கள்ளக்குறிச்சி | 2.60% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 9. | கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதிகளில் உள்ள குடிநீர் விநியோக / பிரதான குழாய்களில் ஏற்படும் பழுதுகளை பழுதுநீக்கம் செய்தல் | ரூ. 9,00,000 | M/s. ஸ்ரீ கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 0.43% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. J.K. டிரேடர்ஸ், கள்ளக்குறிச்சி | 1.28% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1245 / 2021 / இ1)**

**பொருள் எண் 17**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் 21 வார்டுகளிலும் மொத்தம்  எண்கள் தெரு விளக்குகள் தனியார் மூலம் பராமரிக்கப்பட்டு வருகின்றது. மேலும் இப்பணிகளில் பழுதடையும் தெருவிளக்குகளை அந்தந்த இடங்களில் வைத்து அல்லது கிடங்கிற்கு எடுத்து சென்று சரிசெய்து திரும்ப இணைப்பதால் காலதாமதமாகிறது. மேலும் இந்நகராட்சியில் புதியதாக வீட்டு மனைப்பிரிவுகள் ஏற்படுத்தப்பட்ட இடங்களில் மின் விளக்குகள் அமைக்க 211 மின்கம்பங்களில் நகராட்சி மூலம் மின் வசதிகள் செய்யப்பட்டு விளக்குகள் பொருத்தப்படாமல் உள்ளது.

எனவே புதியதாக சுமார் 100 மின் விளக்குகள் spare ஆக தயார் செய்து மின் விளக்குகள் பழுதடைந்த இடங்களில் பொறுத்திவிட்டு, பழுதுகளை சரி செய்து பின்னர் மாற்ற ஒப்பந்த நிறுவனமான திருவாளர் P&B Enter prises நிறுவனத்தினை கோரலாம்.

மேலும் இப்பல்புகள் ஒப்பந்தப்புள்ளிகள் முடியும் தருவாயில் நகராட்சியின் மனை விரிவாக்க பகுதிகளில் பயன்படுத்தவும் ஏதுவாக அமையும். எனவே இதற்கான செலவினத்தினை தரப்படுத்தப்பட்ட விலைவிகித அடிப்படையில் (Standard Schedule of rates) மேற்கொள்ளவும் இதன் தோராய செலவினம் ரூ.7,00,000/-(ரூபாய் ஏழு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

a. மன்றம் அனுமதிக்கலாம்.
b. பணியின் அத்தியாவசியத்தினை கருத்தில் கொண்டு, மேற்கொள்ளப்படும் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் இ1 / 3513 / 2019)

## பொருள் எண் 18

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட தென்கீரனூர் சாலையானது சேலம் நெடுஞ்சாலையில் துவங்கி 700 மீட்டர் நீளத்தில் நகராட்சி சாலையாகவும், அதனை தொடர்ந்து அருகில் உள்ள கிராமங்களை இணைக்கும் முக்கிய சாலையாக உள்ளது. இச்சாலையில் வார்டு எண் 12 அதிக அளவில் வீடுகளிலிருந்து வெளியேறும் கழிவுநீர் இச்சாலையினை ஒட்டிய ஓடையில் செல்கின்றது. இச்சாலையினை கடக்கும் ஓடையால் நகராட்சி சா லை சுமார் 60 மீ நீளம் முற்றிலும் பழுதடைந்துள்ளது. இதனால் இச்சாலையினை தினமும் பயன்படுத்தும் அதிக பொதுமக்கள் மிகவும் சிரப்படுவதுடன் இச்சாலையின் சேதமடைந்துள்ளதால் அதிக விபத்துக்கள் ஏற்படவும் வாய்ப்பாக உள்ளது.

எனவே, இச்சாலையினை மேம்படுத்த கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் பொது மக்கள் அளித்த மனுவின்படி மாவட்ட ஆட்சியர் அவர்களால் 28.07.2021 அன்று நேராய்வு செய்யப்பட்டது. இச்சாலையில் உடனடியாக பொதுமக்களின் பயன்பாட்டிற்கு வரும்நிலையில் பணிகள் மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுறுத்தலின்படி 2 எண்கள் pipe culvert அமைத்து, சாலையினை உயர்த்தி மழையின் சேதத்தினை தடுக்கும் வகையில் கான்கீரீட் சாலை அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 4,50,000/-(ரூபாய் நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1.மன்றம் அனுமதிக்கலாம்.

2.பணியின் அத்தியாவசியத்தினை கருத்தில் கொண்டு, மேற்கொள்ளப்படும் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் இ1 /  / 2019)

## பொருள் எண் 19

கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலகத்தில் தற்போது அனைத்து பிரிவு அலுவலர்கள் அறைகளும் தனித்தனியாக முறைப்படுத்தப்பட்டும், அலுவலர்கள், உதவியாளர்கள் ஆகியோரின் கணினி பயன்பாட்டுக்கான மேசைகள், புள்ளி விபர குறிப்பாளர் ஆகிய அனைத்து இருக்கைகளும் முறையாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. மேலும் பழைய கணினி அறையானது நகராட்சிக்கான சிறு கலந்தாய்வு கூட்ட அறையாக மாற்றப்பட்டுள்ளது. இதனால் அலுவலகத்தில் உள்ள இணைய இணைப்புகள் அனைத்தும் தற்போது இருக்கைகளுக்கு அருகிலேயே இருக்குமாறு மாற்றி அமைக்கவும், UPS lineகளை மாற்றி அமைக்க வேண்டிய அவசியமாகிறது.
எனவே, அலுவலக அறைகளுக்கு பொருத்தப்படும் கண்காணிப்பு கேமராக்களை மாற்றி அமைக்கவும் வேண்டியதாக உள்ளது. இதனால் புதியதாக இணைய இணைப்புக்கு புதியதாக கேபிள் அமைத்து பணி மேற்கொள்ளவும், தேவையான இடங்களில் HUB அமைக்கவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.200000/-(ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) இல் பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது
அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசியம்கருதி, அலுவலகத்தில் மேற்கொள்ளப்படும் பணிகளை மன்றம் அனுமதிக்கலாம்.
3. இப்பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் இ1/ /2021

## பொருள் எண் 20

கள்ளக்குறிச்சி நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் தெருவிளக்கு பராமரிப்பு பணிகள் தனியார் மயமாக்கப்பட்டு திருவாளர் P&B Enterprises மூலம் நடைபெற்று வருகிறது. மேற்படி மதிப்பீட்டில் தெரு விளக்குகள் தவிர பிற உதிரிபாகங்கள் வாங்க வழிவகை செய்யப்பட்டும், இதற்காக கூடுதல் செலவினம் மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண் /2021 நாள் இல் அனுமதி பெற்று இப்பணிகள் நடைபெற்று வருகின்றது.
மேலும் இதற்கான தொகையானது மதிப்பீட்டில் கூடுதல் இனமாக உள்ளதாலும் இதற்கு DPR இல் நகராட்சிகிளன் நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஒப்புதல் பெற்று உள்ளதாலும், கடந்த நாட்களில் அதிக மழையின் காரணமாக பல இடங்களில் பழுதுகளான fault wiring, UG cable, இவற்றினை ஒப்பந்தப்பணி துவங்கிய நாட்களிலிருந்து spare and ON/OFF இனங்களுக்கு ஆகும் தோராய செலவினம் ரூ.20,00,000/-(ரூபாய் இருபது இலட்சம் மட்டும்) மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1.மன்றம் அனுமதிக்கலாம்.
2.பணியின் அத்தியாவசியத்தினை கருத்தில் கொண்டு, மேற்கொள்ளப்படும் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண் இ1 /3513/ 2019)

## பொருள் எண் 21

கள்ளக்குறிச்சி நகராட்சியில், குடிநீர் நிதி 2021-2022ன் கீழ், கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு 30.07.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1. | வார்டு எண் 02, 06, 11, 12 மற்றும் 15ல் உள்ள பகுதிகளில் அமைந்துள்ள சிறுமின் விசைப்பம்புகள் / விசைப்பம்புகள் பழுது நீக்கம் செய்தல் | ரூ. 5,00,000 | M/s. J.K. டிரேடர்ஸ், கள்ளக்குறிச்சி | 0.30% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. ஸ்ரீ கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 1.96% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 2. | துருகம் சாலை குறிஞ்சி மஹால் அருகில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்துதல் (வார்டு எண். 10) | ரூ. 3,50,000 | M/s. J.K. டிரேடர்ஸ், கள்ளக்குறிச்சி | 1.30% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| | | | M/s. ஸ்ரீ கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 0.32% மதிப்பீட்டிற்கும் குறைவு |

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். / 2021 / இ1)**

**பொருள் எண் 22**

கள்ளக்குறிச்சி நகராட்சியில், வருவாய் நிதி 2021-2022ன் கீழ், கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு ……………………2021 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1. | கள்ளக்குறிச்சி நகராட்சி ராஜா நகரில் உள்ள பூங்காவினை மேம்பாடு செய்தல் (வார்டு எண். 05) | ரூ. 5,50,000 | திரு. A.சின்னதுரை, கள்ளக்குறிச்சி | ரூ. 4,77,354/- 0.10% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு. N.செங்கோட்டையன், கள்ளக்குறிச்சி | ரூ. 4,82,889/- 1.16% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| | | | M/s. R.V. & Co., கள்ளக்குறிச்சி | ரூ. 4,90,489/- 2.75% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் விலைப்புள்ளிகளில் 0.10% மதிப்பீட்டைவிட குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திரு. A.சின்னதுரை, கள்ளக்குறிச்சி என்பவரின் விலைப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். / 2021 / இ1)**

பொருள் எண் 23

நகராட்சிக்கு சொந்தமான அனைத்துக் கட்டிடங்களிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்பு ஏற்படுத்துவது மற்றும் பயனற்ற அனைத்து மழைநீர் சேகரிப்பு அமைப்புகளையும் சரி செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வரும் வகையில் இந்நகராட்சிக்கு சொந்தமான 51 கட்டிடங்களுக்கு புதியதாகவும், பழுதடைந்துள்ள மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை முறையாக சரி செய்து பயன்படுத்தும் வகையில் பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ.400000/- (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளை பின்பற்றி, புதியதாக மற்றும் ஏற்கனவே அமைக்கப்பட்ட மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை சரி செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.
3. இப்பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.ந.க.எண் இ1/2191/2021

## பொருள் எண் 24

கள்ளக்குறிச்சி நகராட்சியில் திடக்கழிவுமேலாண்மைதிட்டத்தின் கீழ் வீடு வீடாகசென்றுகுப்பைகள் சேகரிக்கும் பணிக்குகொள்முதல் செய்யப்பட்டமின் கல ஊர்தி (BOV) மொத்தம் 27 வாகனங்கள் இந்நகராட்சிகொள்முதல் செய்யப்பட்டுதிடக்கழிவுமேலாண்மைபணிகள் மேற்கொள்ளப்பட்டுவந்தது. மேலும், நகராட்சிநிர்வாகமண்டலஇயக்குநர் வேலூர் அவர்களின் கடந்த **10.07.2021** அன்றுநேரடிஆய்வில் இந்நகராட்சியில் பொதுசுகாதாரபிரிவில் இயங்கும் மின்கல ஊர்தி 27 வாகனங்களில் 17 வாகனங்கள் பழுதடைந்துள்ளது, இதனால் முதல் நிலைசேகரம் செய்யும் பணியில் மிகவும் சிரமம் ஏற்பட்டுள்ளது. மேற்கண்ட 17 மின் கல ஊர்தி வாகனங்களில் ஏற்பட்டுள்ளபழுதுகளானபேட்டரி, டிப்பிரன்சியல், மோட்டார் மற்றும் இதரபழுதுகளைஉடனடியாகநீக்கம் செய்துபயன்பாட்டிற்குகொண்டுவரவேண்டும் எனஅறிவுறுத்தப்பட்டது. எனவே, மேற்கண்டவாகனங்களைபழுதுநீக்கம் செய்ய ஆகும் உத்தேசசெலவினம் ரூ.9.00 லட்சத்திற்குமேற்கொள்ளமன்றத்தின் அனுமதிக்குவைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-
1.மன்றம் அனுமதிக்கலாம்
2.பணியின் அவசரஅவசியம் கருதிவிலைப்புள்ளிகோரிபணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3.பட்டியல் தொகையினைநகராட்சிவருவாய் நிதியிலிருந்துமேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 1583 /2021/எச்1)

பொருள் எண் 25
கள்ளக்குறிச்சி நகராட்சியில் திடக்கழிவுமேலாண்மைதிட்டத்தின் கீழ் வீடு வீடாகசென்றுகுப்பைகள் சேகரிக்கும் பணிக்குகொள்முதல் செய்யப்பட்டமின் கல ஊர்தி (BOV) மொத்தம் 27 வாகனங்கள் இந்நகராட்சிகொள்முதல் செய்யப்பட்டுதிடக்கழிவுமேலாண்மைபணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. மேலும், மேற்கண்டவாகனங்களில் அவ்வப்போதுபஞ்சர் ஏற்பட்டுஅனைத்துவாகனங்களில் உள்ளடயர்கள் மற்றும் டீயூப்கள் பழுதுஏற்பட்டுவாகனங்கள் இயக்கஇயலாதநிலைஏற்படுகிறது. இதனால் முதல் நிலைசேகரம் செய்யும் பணியில் மிகவும் சிரமம் ஏற்படுகிறது. எனவே, மேற்கண்ட 27 வாகனங்களுக்கு மூன்றுடயர்கள் மற்றும் டீயூப்கள் ஆகமொத்தம் 27 * 3 = 81 டயர்கள் மற்றும் டீயூப்கள் வாங்கி பயன்படுத்த ஆகும் உத்தேசசெலவினம் ரூ.2.00 லட்சத்திற்குமேற்கொள்ளமன்றத்தின் அனுமதிக்குவைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு:-
1.மன்றம் அனுமதிக்கலாம்
2.பணியின் அவசரஅவசியம் கருதிவிலைப்புள்ளிகோரிபணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3.பட்டியல் தொகையினைநகராட்சிவருவாய் நிதியிலிருந்துமேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1584 /2021/எச்1)

பொருள் எண் 26
கள்ளக்குறிச்சி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வீடு வீடாக சென்று குப்பைகள் சேகரிக்கும் பணிக்கு கொள்முதல் செய்யப்பட்ட மின் கல ஊர்தி (BOV) மொத்தம் 27 வாகனங்கள் இந்நகராட்சி கொள்முதல் செய்யப்பட்டு திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், மேற்கண்ட வாகனங்களில் சார்ஜர் அவ்வப்போது பெய்துவரும் மழையினாலும் அதிகமின்அழுத்தம் காரணத்தினாலும் பழுதுஏற்பட்டுள்ளது. இதனால் வாகனங்களுக்குமுறையாக சார்ஜர் ஏற்றாமல் உள்ளதால் வாகனங்கள் இயக்கஇயலாதநிலைஏற்படுகிறது. இதனால் முதல் நிலைசேகரம் செய்யும் பணியில் மிகவும் சிரமம் ஏற்படுகிறது. எனவே, மேற்கண்ட 27 வாகனங்களுக்கும் தனிதனியே சார்ஜர்கள் வாங்கி பயன்படுத்த ஆகும் உத்தேசசெலவினம் ரூ.2.00 லட்சத்திற்குமேற்கொள்ளமன்றத்தின் அனுமதிக்குவைக்கப்படுகிறது.
அலுவலக குறிப்பு:-
1.மன்றம் அனுமதிக்கலாம்
2.பணியின் அவசரஅவசியம் கருதிவிலைப்புள்ளிகோரிபணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3.பட்டியல் தொகையினைநகராட்சிவருவாய் நிதியிலிருந்துமேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1585 /2021/எச்1)

பொருள் எண் 27
கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் உள்ள மேற்குப்புற கடைகள் 22ஐ இடித்து அப்புறப்படுத்தப்பட்டு புதியதாக கடைகள் கட்டப்பட்டது. மேற்படி கடைகள் பொது ஏலம் விடப்பட்டு, புதியதாக வைப்புத்தொகை செலுத்தப்பட்டு 2017–2018 முதல் கடைகள் ஒப்படைப்பு செய்யப்பட்டது. மேற்படி கடைகள் பழைய கடைகளாக இருக்கும்போது 30 ஆண்டுகளாக நடத்தி வந்த நிலையில் 01.04.2012இல் பொது ஏலம் விடப்பட்டு ஏலத்தில் கலந்து கொண்ட குத்தகைதாரர்களால் வைப்புத்தொகையாக ரூ.25000/–(ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும் )வங்கி வரைவோலையாக நகராட்சியில் செலுத்தப்பட்டு, 2017–2018ஆம் ஆண்டில் கடைகள் ஒப்படைக்கப்பட்ட நிலையில், குத்தகைதாரர்களால் செலுத்தப்பட்ட வைப்புத்தொகையினை திரும்ப வழங்கக்கோரி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு
1. பார்வையிடப்பட்டது.
2. குத்தகைதாரர்களால் செலுத்தப்பட்ட வைப்புத்தொகையினை திரும்ப வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்கொள்ளப்படும் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண் அ2/ /2021

பொருள் எண் 28

தற்போது பரவி வரும் கொரோனா நோய் தொற்றின் காரணமாக நோயின் தீவிர பரவலை தடுக்கும் பொருட்டு மாநில அரசினால் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்கள், நெறிமுறைகளை பின்பற்றி மாவட்ட ஆட்சித்தலைவர், கள்ளக்குறிச்சி அவர்களால் நடத்தப்பட்ட ஆய்வுக்கூட்டங்களில் தெரிவித்துள்ள அறிவுரைகளில் கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் வசிக்கும் பொது மக்களை கொரோனா நோய் தொற்று பரவலிலிருந்து காப்பாற்றும் நோக்கத்தில் நகராட்சி வழியாக நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் தினசரி ஆட்டோ மூலம் எச்சரிக்கை அறிவிப்பு செய்தல், நோய் தொற்று தொடர்பான விழப்புணர்வு பேனர்கள், சிறு துண்டு பிரசுரங்கள் அச்சடிப்பு செய்தல், பணியாளர்கள் நியமனம் போன்ற அத்தியாவசிய செலவினங்கள் மேற்கொள்ள வேண்டி உள்ளது. எனவே மேற்காணும் பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.50 இலட்சம் (ரூபாய் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலரின் முன் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. தனி அலுவலர் முன்அனுமதி வழங்கலாம்.
2. நோயின் தீவிரத்தன்மையினையும், பொது மக்களின் பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் எச்1/ 733 / 2020

**தனி அலுவலர்**
**கள்ளக்குறிச்சி நகராட்சி**